செய்தி வெளியீடு எண்: 786 நாள்: 12.11.2019

<u>செய்தி வெளியீடு</u>

**சென்னையில் நவம்பர் 18 ஆம் தேதி தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம்**

சென்னையில் வரும் **நவம்பர் 18** ஆம் தேதி தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் நடைபெறவுள்ளதாக வேலைவாய்ப்புத்துறை இயக்குநர் மற்றும் முதன்மை செயல் அலுவலர் திரு. V.விஷ்ணு, இ.ஆ.ப. அவர்கள் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பு :

மாநில தொழில் நெறி வழிகாட்டும் மையத்தின் மூலம் வரும் **நவம்பர் 18** ஆம் தேதி திங்கட்கிழமை காலை 10 மணி முதல் 2 மணி வரை கீழ்காணும் முகவரியில் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் நடைபெற உள்ளது.

மாநில தொழில்நெறி வழிகாட்டும் மையம்,
A– 28, முதல் தளம், டான்சி கார்ப்பரேட் வளாகம்,
திரு.வி.க தொழிற்பேட்டை, கிண்டி,
சென்னை – 600 032.

படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு தனியார் துறை மூலம் வேலைவாய்ப்பு ஏற்படுத்திட இம் முகாம் நடத்தப்படுகிறது. இவ்வேலைவாய்ப்பு முகாமில் 25 க்கும் மேற்பட்ட தனியார் துறை நிறுவனங்கள் கலந்து கொள்ள உள்ளன.

பட்டய படிப்பு, பட்ட படிப்பு, பட்ட மேற்படிப்பு, துணை மருத்துவ படிப்பு, I.T.I மற்றும் பொறியியல் பட்டப்படிப்பு படித்துள்ள 21 வயது முதல் 40 வயது வரை உள்ள வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் கலந்து கொண்டு பயன்பெறலாம்.

வேலைநாடுநர்கள் தங்கள் கல்விச் சான்றிதழ்கள் மற்றும் சுய விவர குறிப்புடன் (RESUME) கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. முகாமில் கலந்து கொள்வதற்கு முன் பதிவு அவசியமில்லை. இதற்கான பயணப்படி ஏதும் வழங்கப்படமாட்டாது

மேலும் விவரங்களுக்கு மாநில தொழில்நெறி வழிகாட்டும் மையத்தை நேரிலோ அல்லது தொலைபேசி (044 – 22500134) வாயிலாகவோ தொடர்பு கொள்ளலாம்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**